# மத்திய சுற்றாடல் அதிகாரசபை - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டில் பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடு குறைவாக கணக்கிடப்பட்டமையால் மீளாய்வாண்டில் தளபாடங்கள் பொருத்திகளின் பெறுமதி ரூபா 5,452,0045 தொகை கூடுதலாகவும் பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாடு அதே தொகையினால் குறைத்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய தளபாடம் மற்றும் பொருத்திகளின் கொள்வனவுகள் ரூபா 1,354,887 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் தளபாடம் மற்றும் பொருத்திகளின் கொள்வனவுகள் ரூபா 169,247 ஆக காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) சுற்றாடல் அதிகாரசபையை மாளிகாவத்தை கட்டிடத்தில் நடாத்திச் செல்வதற்காக மீளாய்வாண்டிற்காக கட்டிட வாடகை செலுத்தப்படாமல் இருந்ததுடன், அத்தொகையான ரூபா 11,790,000 அளவிற்கு கணக்குகளில் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 விளக்கமளிக்கப்பட்டிராத வித்தியாசங்கள்

மீளாய்வாண்டிற்குரிய கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 110,125,260 ஆக இருந்த போதிலும் கணிப்பீட்டின் பிரகாரம் ரூபா 109,606,316 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 518,944 நிதிஏற்பாடு கூடுதலாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 57,626,955 தொகையான கடன்பட்டோருக்காக காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய கடன் ரூபா 413,738 தொகையான 03 மீதிகள் 02 முதல் 04 ஆண்டுகள் வரையான காலமாகக் காணப்பட்டன.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 37,108,281 தொகைான கடன் கொடுத்தோருக்காக காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 312,320 தொகையான செலுத்த வேண்டிய 05 மீதிகள் 02 முதல் 04 ஆண்டுகள் வரையான காலமாகக் காணப்பட்டன.

(இ) மாளிகாவத்தை அலுவலகத் தொகுதியை பராமரித்துச் சென்ற காலப்பகுதியிலிருந்து காணப்பட்ட செலுத்த வேண்டிய ரூபா 830,610 ஆன பாதுகாப்புச் செலவினத்திற்குரிய காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 ஆம் ஆண்டின் போது அட்டுறுச் செலவினம் ரூபா 1,710,938 மிகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் 2012 ஆம் ஆண்டில் ரூபா 166,448 செலவிடப்பட்டு கேள்வி நடைமுறையிலிருந்து விலகி தளபாடங்களும் பொருத்திகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அத்தளபாடங்களும் உபகரணங்களும் மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்றிருந்த போதும் ஏடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அட்டுறு செலவின மிகை ஒதுக்கீடுகள் மீளாய்வாண்டிலும் பின்னைய ஆண்டுகளிலும் அங்கீகாரமின்றி செலவின மீள்நிரப்பலுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பாக பணிப்பாளர் நாயகம் அட்டுறு

செலவினங்களை குறிப்பாக மதிப்பிடு செய்ய முடியாது என பதிலளித்திருந்தார்.

(உ) நீதிமன்ற தண்டப் பணமாகக் கிடைக்கவேண்டிய ரூபா 339,333 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 1.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

03 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 8,585,101 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களுக்குரிய சான்றுகள் இல்லாததன் காரணமாக கணணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | **இணங்காமை** |
|---|---|
| (அ) திறைசேரிச் சுற்றறிக்கை | |
| (i) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு இருந்த போதிலும் இது நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐ/ஏ/ஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கணனி பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) தாபனவிதிக்கேவை XV ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் பிரிவு | கல்வி மற்றும் பயிற்சி என்ற நிலைக்குள் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றுள்ள 19 உத்தியோகத்தர்களுக்காக இடர்நேர் |

| | | |
|---|---|---|
| | | கொடுப்பனவாக நாளொன்றுக்கு 50 டொலர் வீதம் செலுத்தப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் ரூபா 251,247 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2010 ஒக்தோபர் 11 ஆம் திகதிய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | இரண்டாம் தர உத்தியோகத்தர்களுக்காக செலுத்த வேண்டிய இணைந்த படி அளவிற்குப் பதிலாக பெறுமதியைக் கருத்திற்கொள்ளாமல் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 72,107 இணைந்த படியாக கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. அது மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1997 பெப்ரவரி 03 ஆம் திகதிய 06/97 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட தாபன விதிக்கோவையின் III ஆம் அத்தியாயம் | பதில் கடமை பதவிகளுக்காக 03 மாதங்கள் ஆகக்கூடிய எல்லையில் நியமிக்க முடியுமான போதிலும், அதிகாரசபையின் 08 ஊழியர்கள் இந்த எல்லையை மிகைத்து 03 மாதங்கள் முதல் 03 ஆண்டுகளுக்கிடையேயான வீச்சில் பதில் கடமை பதவிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| (ஊ) | அரசாங்க நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------------------------------- | |
| | (i) நி.பி. 371(2)(இ) | 16 ஆண்டுகள் பழைமையான ரூபா 189,450 முற்பண மீதி இருந்ததுடன், அதிகாரசபையால் தொடரப்பட்ட 25161 ஆம் இலக்க வழக்கின் பிரகாரம் செயற்படுத்தப்படுத்தப்பட்டு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. இப்பிரதிவாதி தற்போது மரணமடைந்துள்ளதாக பொது முகாமை யாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| | (ii) நி.பி 757 | அதிகாரசபையின் 06 பிராந்திய அலுவலகங்க ளுக்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**1.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வெளிநாட்டு பயணமொன்றிற்காக'பிளிசரு' செயற்திட்டப் பணிப்பாளருக்கு முன்னைய ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 47,541 தொகை 2012 யூலை 31 வரை செயற்திட்டத்திடமிருந்து மீள்நிரப்பப்பட்டிருக்க வில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம், கணக்கில் ரூபா 1,709,312 ஆக இருந்தது. 2012 சனவரி மாதம் ரூபா 801,425 மட்டும் செலுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 907,887 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டமைக்கான காரணம் கணக்காய்விற்குச் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 6,305,261 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதனை ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 8,871,112 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிகை ரூபா 2,565,851 ஆல் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 51,496,538 ஆல் அதிகரித்திருந்தமை இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

நிதி விளைவுகள் தொடர்பான முக்கிய தரவுகள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பான பெறுமதிகளுடன் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா(,000) | ரூபா(,000) |
| மீண்டுவரும் மானியம் | 275,997 | 260,000 |
| ஏனைய மானியங்கள் | 53,596 | 57,804 |
| பிற வருமானம் | 142,354 | 111,087 |
| மொத்த செயற்பாட்டுச் செலவினம் | 507,594 | 456,097 |
| மிகை | 6,305 | 8,871 |

## 2.3 தொழிற்படு மூலதன முகாமை

| திரவத் தன்மை விகிதங்கள் | நியமவிகிதம் | ஆண்டு | | |
|---|---|---|---|---|
| | | 2011 | 2010 | 2009 |
| நடைமுறை விகிதம் | 2:1 | 1.7:1 | 1.56:1 | 1.54:1 |
| விரைவுச் சொத்து விகிதம் | 1:1 | 1.6:1 | 1.48:1 | 1.44:1 |

முன்னைய ஆண்டுன் ஒப்பிடும் போது மூலதன விகிதம் சிறப்பான நிலைமையில் காணப்படுகின்றது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சுற்றாடல் முகாமைத்துவ மதிப்பீட்டு பிரிவு, சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்தும் பிரிவு மற்றும் சுற்றாடல் கல்வி செயற்பாட்டுப் பிரிவு ஆகிய 03 பிரிவுகளின் நிதிசார் செயலாற்றல் 50% வீதத்திற்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) பின் பயன்பாட்டு பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ தேசிய செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 100,000,000 நிதி ஏற்பாட்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 44,700,000 ஆகும். அதில் 22% சம்பளம் மற்றும் வேதனங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. நிதிஏற்பாட்டில் குறைவாகப்

பயன்படுத்திய பணம் 55,300,000 ஆக இருந்ததுடன், அது 55% சதவீதமாக இருந்தது.

(இ) பின் பயன்பாட்டு பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ தேசிய செயற்திட்டத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆண்டின் போது நிறைவேற்றப்பட வேண்டிய கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றலின் பௌதீக மற்றும் நிதிசார் செயல் முன்னேற்றம் பின்வருமாறாகும்

(i) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளீர்க்கப்படாத C.1.12 Waste Management activities in Public and private instructions என்ற செயற்பாட்டிற்காக செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் ரூபா 3,155,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) நடைமுறைப்படுத்தப்படாத 20 செயற்பாடுகளுக்கான நிதிஏற்பாடு ரூபா 8,920,000 அதாவது 100% எஞ்சியிருந்தது.

(iii) 99% இற்கும் 50% இற்கும் இடைப்பட்ட நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்த 14 செயற்பாடுகளில் ரூபா 35,919,000 தொகை எஞ்சியிருந்தது.

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

அதிகாரசபையின் பிராந்திய அலுவலகங்களுக்கும் முறைப்பாட்டுப் பிரிவிற்கும் கணனி மென்பொருள் முறைமையொன்றை தாபிப்பதற்காக 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 600,000 கிரயத்திற்கு இணக்கப்பாட்டிற்கு வந்து ரூபா 300,000 தொகையான முற்பணத்தை செலுத்தியிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அம்முறைமை தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 வாகனப் பயன்பாடு

மீளாய்வாண்டில் அதிகாரசபையிடம் 50 வாகனங்களைக் கொண்ட தொகுதியொன்று காணப்பட்டதுடன், அதில் 21 ஒதுக்கப்பட்ட வாகனங்களும் 13 குழாம் வாகனங்களும் காணப்பட்டன. அதிகாரசபையிடம் 50

வாகனங்களைக் கொண்ட தொகுதியொன்று காணப்பட்ட போதும் வாடகை வாகனங்களுக்காக ரூபா 6,462,813 செலவிடப்பட்டிருந்தது.

**3.4 பதவியணி முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 802 பேராக இருந்ததுடன், உள்ளவாறான பதவியணி 683 ஆக இருந்தது. அதன் பிரகாரம் வெற்றிடங்கள் 119 ஆக இருந்தன.

(ஆ) 08 உத்தியோகத்தர்களுக்காக பதில் கடமை புரியும் காலம் 03 மாதத்தை மிகைத்திருந்த காலப்பகுதிக்காக 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பதில் கடமைப் படியாக ரூபா 439,121 தொகையும் எரிபொருள் படியாக ரூபா 216,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) 2008 நவம்பர் 25 ஆம் திகதிய பொது வியாபார சுற்றறிக்கை இலக்கம் 52 இன் பிரகாரம் 60 வயதினைப் பூர்த்திசெய்த உத்தியோகத்தர் ஒருவரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த முடியாத போதிலும், பணிப்பாளர் நாயகம் 2011 மார்ச் 05 ஆம் திகதி 60 வயதைப் பூர்த்தி செய்ததன் காரணமாக ஓய்வுபெற்றுச் சென்றிருந்ததுடன், அங்கீகாரமொன்று இன்றி தொடர்ந்தும் அப்பதவியில் கடமை புரிந்து வந்தார்.

**4. கணக்களிதன்மையும் நல்லாட்சியும்**

**4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்**

அதிகாரசபையால் மீளாய்வண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயன் முன்னேற்ற மீளாய்வு அறிக்கையில் இலக்கை அடையப் பெறுதல் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நோக்கம் மற்றும் இலக்கு (goals and targets) என்பன அடையப்பட வேண்டியவற்றுக்காக, பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் பெயரிடப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உள்ளகக் கணக்காய்வு உதவியாளர் வெற்றிடம் மீளாய்வாண்டிலும் காணப்பட்டது.

(ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 13(5)(டி) பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கொள்வனவுத் திட்டம்**

அதிகாரசபையால் மீளாய்வாண்டிற்குரிய பொழிப்பாக்கப்பட்ட கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அத்திட்டத்தின் விரிவான தகவல்கள் அடங்கிய கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் கொள்வனவுத் திட்டம் நடைமுறைச் சாத்தியமானதா, மீளாய்வு செய்யப்பட்டுள்ளதா, கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டதா என உறுதிப்படுத்த முடியவில்லை.

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது பணிப்பாளர் சபையால் வரவு செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்துடன், மீளாய்வாண்டின் இறுதியின் போது திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. பாதிடப்பட்ட 07 செலவினத் தலைப்பிற்குரிய உள்ளவாறான செலவினம் 95% இலிருந்து 957% வரையான வீச்சில் இருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.5 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்**

அதிகாரசபை 2007 இன் ஆண்டறிக்கையை 2009 யூன் 12 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருந்தது. 2008 மற்றும் 2009 ஆம்

ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை மீளாய்வாண்டு வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

## 4.6 சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) விசிறல் நிறப்பூச்சு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

(i) விசிறல் நிறப்பூச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வளிமண்டலத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தப்படுவதுடன், அதிகாரசபை அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) விண்ணப்ப படிவம் பூர்த்தி செய்யப்படாதிருக்கையில் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) டிங்கரின் வேலை மேற்கொள்ளும் போது 1996 மே 21 ஆம் திகதிய 924/12 ஆம் இலக்க பட்டோலை 01 இன் பிரமாணம் 2 இன் பிரகாரம் 63 டெசிபலுக்கு குறைந்த ஒலி பேணப்படுகின்றதா என சுற்றாடல் அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) விசிறல் பூச்சு வேலைகளுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 03 தடவைகளில் வெளிக்களப் பரிசோதனையின் போ்து விசிறல் பூச்சு கூடாரமொன்றிலேயே மேற்கொள்ளப்பட்டதா என வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனை இலக்கம் 1.4 இன் கீழ் ஒலி அளவீட்டு அறிக்கையொன்றும் 2.3 ஆம் நிபந்தனையின் கீழ் வளி மாசடைதல் கட்டுப்பாட்டு முறைமையின் செயலாற்றல் தொடர்பான அறிக்கையையும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரித்த நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களுக்குள் அதிகாரசபைக்கு, கைத்தொழிலாளர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த

அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை.

(vi) ஒரே முறைப்பாடு 2007 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் 12 ஆம் திகதியிலிருந்து 2011 ஒக்தோபர் 11 வரையான 5 ஆண்டுகளில் பல தடவைகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அம்முறைப்பாடு தொடர்பாக அதிகாரசபையால் 05 ஆண்டுகளிலும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட செயற்பாடு உறுதிப்படுத்தப்பட்டி ருக்கவில்லை.

**(ஆ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தை திருத்தம் செய்தல்**

(i) திருத்தம் செய்வதற்காக சுற்றாடல் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 2006 யூலை 21 ஆம் திகதிய அமைச்சரவை பத்திரத்தின் 22 மற்றும் 23 ஆம் பந்திகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள தேவைப்பாட்டை உள்ளடக்கும் வகையில் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்தல் மற்றும் அச்செயற்பாட்டிற்காக தேவையான திருத்த சட்டமூலங்களைத் தயாரிப்பதற்கு சட்ட வரைஞருக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்தது.

(ii) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்ட வரைபினை தயாரிப்பதற்கு சட்ட வரைஞருக்கு அமைச்சரவை கட்டளை இட்டிருந்தது.

அதன் பிரகாரம் மேம்படுத்துவதற்கு தேவையான 18 பிரிவுகள் இனங்காணப்பட்டிருந்த போதும் அவ்வாறு இனங்காணப்பட்ட 18 பிரிவுகளிற்காக 2012 யூலை 31 வரை சட்டத்தில் திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) 2011 நவம்பர் 15 ஆம் திகதிய 119 ஆவது பாராளுமன்ற வெளியீட்டின் மூலம் மத்திய சுற்றாடல் அதிகாரசபை இனங்கண்ட பிரதான பிணக்குகளின் கீழ் 2008 – 2012 கூட்டுத்திட்டத்தின்

பிரகாரம் தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் திருத்தப்பட வேண்டுமென கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்து. 2012 மே 24 ஆம் திகதி வரையில் அத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) சுற்றாடல் முறைப்பாடுகளின் ஆய்வு**

(i) 2011 ஆம் ஆண்டின் போது அதிகாரசபைக்கு கிடைத்த முறைப்பாடுகள் 1974 ஆக இருந்தது. கொழும்பு மாவட்டத்தில் 371 முறைப்பாடுகளும் கம்பஹா மாவட்டத்தலிருந்து 234 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் அதில் கொழும்பு மாவட்டத்திலிருந்து கிடைத்த 02 முறைப்பாடுகளும் கம்பஹா மாவட்டத்திலிருந்து கிடைத்த 15 முறைப்பாடுகளும் முதலீட்டுச் சபைக்கு உரித்தான கைத்தொழில்களுடன் தொடர்பானதாகும். அத்தகைய 17 முறைப்பாடுகளும் முதலீட்டு சபைக்கு அனுப்பிவைக்கபட்டிருந்ததுடன், அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பிராந்திய அலுவலகங்களுக்கு கிடைக்கும் முறைப்பாடுகளுக்காக தலைமை அலுவலகத்திலிருந்து தொடர்பு கொள்வதற்கான இலக்கமொன்று பெற்றுக்கொள்ளும் முறையொன்று இல்லாமையால் மாகாண அலுவலகங்களுக்கு கிடைக்கும் அனைத்து முறைப்பாடுகளும் அனுப்பிவைக்கப்பட்ட முறைப்பாடுகளும் தீர்க்கப்பட்டிருந்ததா என்பதை தலைமை அலுவலகத்திற்கு தெளிவாக இனங்காண முடியவில்லை.

(iii) 2012 மார்ச் மாதம் 30 ஆம் திகதி கோரப்பட்ட முறைப்பாடுகளின் செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மேல் மாகாண அலுவலகத்தின் தெரிவுப் பரிசோதனையின் போது களுத்துறை மாகாண அலுவலகத்திற்கு 70 முறைப்பாடுகளும் தென் மாகாண அலுவலகத்திற்கு 84 முறைப்பாடுகளும் வடமத்திய மாகாண அலுவலகத்திற்கு 79 முறைப்பாடுகளுமாக 233 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன. அதில் 28 முறைப்பாடுகள் மாகாண அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய முறைப்பாடுகளில் 22 முறைப்பாடுகளுக்கு பின்தொடர்

நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், 10 முறைப்பாடுகள் தொர்பாக பரிசீலனைகள் செய்யப்படிருக்கவிலலை.

(iv) மேல் மகாண அலுவலகத்திற்கு கிடைத்த முறைப்பாடுகளை பரிசோதனை செய்த போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட கைத்தொழில்களிலிருந்து கிடைத்த 371 முறைப்பாடுகளில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள கைத்தொழில்களுக்கு எதிராக 18 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. அக்கைத்தொழில்களுக்குரிய அனுமதிப்பத்திரங்களை வழங்கல், சுற்றாடல் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் அக்கைத்தொழில்கள் செயற்பட்டுள்ளதாக முறைப்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் அனுமதிப்பத்திரத்தை வழங்கும் போது அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் என்பன சுற்றாடல் தாக்கங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்திற்கு இணங்க கைத்தொழில்களை பராமரித்துச் செல்லப்படுவது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(v) 2011 யூலை மாதம் வரையில் கிடைத்த முறைப்பாடுகளில் சுற்றாடல் மாசடைதல் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு கிடைத்த 31 முறைப்பாடுகளை தீர்த்து வைவப்பதற்காக தொடர்புபடுத்தப் பட்டிருந்தது. அவ்வாறு தொடர்புபடுத்தப்பட்ட முறைப்பாடுகளில் 12 முறைப்பாடுகள் தொலைத்தொடர்புக் கோபுரங்கள் பொருத்துதல் தொடர்பாக கிடைத்தவையாகும் அம்முறைப்பாடுகள் அனைத்தும் தொலைத் தொடர்பு மீளமைப்பு ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், அம்முறைப்பாடுகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் காலத்திற்குக் காலம் அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(1) பாதீடு

(2) நிலையான சொத்துக்கள்

(3) பதிவேடுகள் பேணப்படுதல்

(4) வெளிநாட்டுப் பிரயாணம்

(5) கொள்வனவுச் செயற்பாடு

(6) மீண்டுவரும் மானியம்

(7) பணிக்கொடை ஒதுக்கீடு